செ.வெ.எண் :603 நாள்: 16.09.2021

# பத்திரிக்கை செய்தி

## தஞ்சாவூர் மாவட்டத்தில் பயறுவகை பயிர்களை கூடுதல் பரப்பளவில் சாகுபடி செய்ய சிறப்பு திட்டம்

**-மாவட்ட ஆட்சியர் தகவல்**

காவிரி பாசன பகுதியான தஞ்சாவூர் மாவட்டத்தில் சம்பா/தாளடி பருவத்தில் சுமார் 1.30 லட்சம் ஹெக்டரில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பபட்டு வருகிறது. சம்பா/தாளடி சாகுபடிக்கு பிறகு நெல் தரிசில் பயறுவகை பயிர்கள் சாகுபடி முக்கிய பங்கு வகிக்கிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் உளுந்து பயிரானது 16000 எக்டரில் பயிரிடப்பட்டு ஆண்டுக்கு 17500 டன்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. நெல் தரிசில் உளுந்து இதுவரை சுமார் 12000 எக்டர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

2021-22 ஆண்டில் நெல் தரிசில் உளுந்து கூடுதலாக 15,000 எக்டரில் உளுந்து சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டு செயல்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன்படி அனைத்து வட்டாரங்களிலும் வேளாண்மை துறையின் மூலம் விவசாயிகளுக்கு உளுந்து சாகுபடி குறித்த விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட உள்ளன.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் சிறப்பு நோக்கு திட்டத்தின் கீழ் 16.09.2021 அன்று மாவட்ட ஆட்சியரகத்தில் பயறுவகை பயிர்களை கூடுதல் பரப்பளவில் சாகுபடி செய்யும் சிறப்பு செயல்திட்டத்திற்கான கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பயறுவகை பயிர்களில் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்த புத்தகத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் வெளியிட தஞ்சை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர், திரு.ஜஸ்டின் அவர்கள் பெற்றுக்கொண்டார். பயறு வகை பயிர்களில் உற்பத்தி திறனை அதிகரித்து விவசாயிகள் பயன்பெற ஆவன செய்யுமாறு வேளாண்மைத் துறை சார்ந்த அலுவலர்களை கேட்டுக்கொண்டார்கள். இக்கூட்டத்தில் வேளாண்மை துணை இயக்குநர்கள், வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்கள், வேளாண்மை அலுவலர்கள், துணை வேளாண்மை அலுவலர்கள் மற்றும் அனைத்து வட்டார வேளாண்மை உதவி அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**செய்திவெளியீடு : செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**